[பேரவைத் தலைவர்] [2014 ஜனவரி 31

திரு. எஸ். ரெத்தினராஜ் அவர்கள் 1980 முதல் 1984 வரை குளச்சல் தொகுதியிலிருந்தும், 1985 முதல் 1988 வரை நாகர்கோவில் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. ஆ. கருப்பையா அவர்கள் 1967 முதல் 1971 வரையிலும் மற்றும் 1971 முதல் 1976 வரையிலும் இரண்டு முறை கங்கைகொண்டான் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றினார்கள்.

திரு. சி. துரைராஜ் அவர்கள் 2001 முதல் 2006 வரையிலும் மற்றும் 2006 முதல் 2011 வரையிலும் இரண்டு முறை சேடப்பட்டி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பான முறையில் பணியாற்றினார்கள். மேலும், 19-5-2001 முதல் 29-8-2002 வரை அமைச்சராகவும் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஜனவரி 31]
1—

துணை மின் நிலையம்

***36197—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், கீரப்பாளையம் ஒன்றியம், பாளையங்கோட்டை ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், கீரப்பாளையம் ஒன்றியம், மேல்பாதி பாளையங்கோட்டை, கீழ்பாதி பாளையங்கோட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு மேல்பாதி பாளையங்கோட்டை ஊராட்சியில் அமைந்துள்ள 33/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து மின் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. பெருகிவரும் மின் பளுவைக் கருத்தில் கொண்டு, 12-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பாளையங்கோட்டை 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தினை 110/11 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கற்ற நெஞ்சம் கலை மறந்தாலும், கண்கள் நின்று இமைக்க மறந்தாலும், தென்றல் தவழ மறந்தாலும், தெவிட்டாத தமிழ் மொழியை நாம் உச்சரிக்க மறந்தாலும், மொட்டுகள் மலர மறந்தாலும், சிட்டுகள் சிறகடித்துப் பறக்க மறந்தாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்*

தொண்டர்களையும், தமிழர்களையும், தமிழர்கள் உரிமைகளையும், உலகத் தமிழர்களையும் அரை வினாடியும் மறவாமல் கட்டிக் காத்து வருகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) உலகத் தமிழர்களின் உன்னதத் தலைவி, மாட்சிமை பொருந்திய தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித மலர்ப் பாதங்களைப் பணிவோடு வணங்குகிறேன். 2014 ஆம் ஆண்டில் தித்திக்கும் செய்தியாக காட்டுமன்னார்கோவில் தொகுதி மக்களுக்கு, பாளையங்கோட்டை ஊராட்சியில் இருக்கக்கூடிய மக்களுக்கு 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தை 110 கி.வோ துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்ற தரணி போற்றும் தங்கத் தாரகை மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பிலும், என் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதியாண்டில் இந்தப் பணி தொடங்கி நடைமுறைப்படுத்தப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பாளையங்கோட்டை, கீழ்பாதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு 33/11 கி.வோ. பாளையங்கோட்டை துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது அங்கே 8 எம்.வி.ஏ. திறன் கொண்ட இரண்டு மின் மாற்றிகள் இயங்கி வருகின்றன. ஆக மொத்தம் 16 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின் மாற்றிகள் இயங்கி வருகின்றன. அந்தப் பகுதியினுடைய அதிகபட்ச மின் பளு இப்போது ஏறத்தாழ 15.4 எம்.வி.ஏ. என்ற அளவில்தான் இருக்கிறது. தேவைக்குட்பட்ட நிலையில் அங்கு மின்சாரம் இன்று இருந்தாலும்கூட, வளர்ந்து வரும் அந்தப் பகுதியின், வருங்காலத் தேவையை உணர்ந்த நமது அம்மா அவர்களின் அரசு, பின்னாளில் பற்றாக்குறை ஏற்பட்டு அதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக, வளர்ந்துவரும் இடங்களையெல்லாம் கண்டறிந்து, தேவையான இடங்களில் புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பது அல்லது இருக்கின்ற துணை மின் நிலையங்களைத் தரம் உயர்த்துவது

2014 ஜனவரி 31]

ஆகிய பணிகளைச் செய்யவேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டதின் அடிப்படையிலே, இப்போது பாளையங்கோட்டையிலே 2 x 8 MVA திறன்கொண்ட மின் மாற்றிகளுக்குப் பதிலாக 2 x 10 MVA திறன்கொண்ட 20 MVA திறன்கொண்ட 110/11 கி.வோ. மின் நிலையங்களாக அவற்றை மாற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவை பன்னிரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்டு, அதற்கான பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. 12-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஏறத்தாழ 367 புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டு, அதிலே 94 துணை மின் நிலையங்கள் அமைக்கின்ற பணிகள் ஏற்கெனவே முடிவடைந்துவிட்டன. மற்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதேபோல, 41 துணை மின் நிலையங்களைத் தரம் உயர்த்துவதற்கு முடிவு செய்து, அந்தப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் பாளையங்கோட்டை பகுதியிலே உள்ள துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டுள்ளார். ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டுள்ள 40 துணை மின் நிலையங்களில் இதுவும் இருக்கிறது. ஆகவே, இந்தத் துணை மின் நிலையம் இந்த நிதியாண்டு அமைக்கப்படுமா என்றும் மாண்புமிகு உறுப்பினர் கேட்டுள்ளார். இன்றைக்குள்ள நிதி நிலைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கனிவுடன் பரிசீலித்து உரிய நடவடிக்கைகளை விரைவாக எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோவில் பகுதிவாழ் மக்களின் நலன் கருதி, காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியில் 6-11-2013 அன்று காணொளிக் காட்சிமூலம் 24.66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கால்நடை மருந்தகக் கட்டடத்தைத் திறந்து வைத்த புதிய புறநானூறு, எங்கள் வாழ்வே, எங்கள் வளமே. 2014-ல் நடைபெறுகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் வெற்றிபெற்று, செங்கோட்டையை ஆளப்போகின்ற எங்கள் சிங்க நிகர் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களுக்கும், பெருகி வருகின்ற மின் தேவைக்கு ஏற்ப அங்கேயுள்ள துணை

மின் நிலையம் தரம் உயர்த்தப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காட்டுமன்னார்கோவில் வட்டம், டி. புத்தூரில் 33/11 கி.வோ. துணை மின் நிலையம் இயங்கி வருகின்ற நிலையில், பெருங்காளூர், கொடியாளம், முகையூர், விளாகம் உள்ளிட்ட புவனகிரி தொகுதிவாழ் மக்களும், காட்டுமன்னார்கோவில் தொகுதிவாழ் மக்களும் சற்றொப்ப 30 கிலோ மீட்டர் பயணித்து குமராட்சியிலும், லால்பேட்டையிலும் மின் கட்டணத் தொகையைக் கட்டி வருகிறார்கள். எனவே, டி. புத்தூரை மையமாகக் கொண்டு இயங்கக்கூடிய 33/11 கே.வி. திறன் கொண்ட துணை மின் நிலையத்தில் புதியதாக உதவி மின் பொறியாளர் அலுவலகம் தொடங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, டி. புத்தூர் பகுதியில் உரிய ஆய்வுகளை மேற்கொண்டு, அதனடிப்படையில், தேவை ஏற்படின், புதியதாக உதவி மின் பொறியாளர் அலுவலகம் தொடங்குவதற்கு உரிய நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதிக்குட்பட்ட எஸ். கொடிக்குளம், கூட்டுறவு நூற்பாலை பகுதி, எம்.பி.கே. புதுப்பட்டி போன்ற பகுதிகளில் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டு நீண்ட காலம் ஆகின்றது. மேற்படி பகுதிகளில் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டுவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன். அவ்வாறு நிலம்

2014 ஜனவரி 31]

கையகப்படுத்தப்பட்டிருப்பின், மேற்படி இடங்களில் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணி எப்போது துவங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதையும் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதிகளில் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசு தற்சமயம் கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது. அதற்கான நிர்வாக ஒப்புதல்களெல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன.

புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகளில் காலதாமதம் ஏற்படுவதற்கான காரணங்களை பலமுறை நான் இந்த அவையில் சொல்லியிருக்கிறேன். புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு உரிய நிலங்கள் கிடைக்காத காரணத்தினால் காலதாமதம் ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதிகளை நாங்கள் பரிசீலித்து, அந்தப் பகுதிகளில் நிலம் கையகப்படுத்துவதில் ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால், அதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இதற்கு முடிந்த அளவு ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிலம் கையகப்படுத்துவதில்தான் காலதாமதம் ஏற்படுகிறதே தவிர, புதிய மின்மாற்றிகள் அமைப்பதிலோ, மின் நிலையங்கள் அமைப்பதிலோ காலதாமதம் ஏற்படுவதில்லை.

மேலும், புதிய மின் நிலையம் அமைப்பதற்கு உரிய நிலத்தை, வருவாய்த் துறையிடம் கலந்தாலோசித்தும், தனியாரிடத்தில் கொள்முதல் செய்வதற்கும் அரசு தயாராக இருக்கிறது. அரசு நிலங்களை மாற்றியமைப்பதில் எந்தப் பிரச்சினையும் ஏற்படுவது இல்லை. விரைவாக நிலம் மாற்றம் செய்யப்படுகின்றன. ஆனால், தனியார் நிலங்களைக் கையகப்படுத்துவதில்தான் சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அந்தப் பிரச்சினைகளையெல்லாம் விரைவாக போக்கி, பேச்சுவார்த்தையின் மூலமாகவோ அல்லது உரிய நடவடிக்கையின் மூலமாகவோ விரைவாக நிலம் கண்டறிப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 ஜனவரி 31

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதிக்குட்பட்ட பந்தநல்லூர் ஊராட்சி, பேரூராட்சிக்கு நிகரானது. பந்தநல்லூரைச் சுற்றியிருக்கக்கூடிய ஆரளூர், கீழ்மாதூர், இருமூலை, வேட்டமங்கலம் ஆகிய ஊராட்சிகளில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட விவசாய பெருமக்கள் வாழ்கிறார்கள்; அங்குள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களும் விவசாயத்திற்குட்பட்ட பகுதியாக இருக்கின்றன. அந்தப் பகுதியில் துணை மின் நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நிலம் கையகப்படுத்துவதில் பிரச்சினைகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். பந்தநல்லூரில் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தேவையான இடமும் அரசின் புறம்போக்கு நிலமாக உள்ளது என்பதைத் தெரிவித்து, பந்தநல்லூரில் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் எந்தெந்தப் பணிகளை எடுக்க வேண்டுமென்று இறுதி செய்யப்பட்டிருக்கின்ற 367 பணிகளில் பந்தநல்லூர் பகுதி வருமா என்பதைப் பார்த்துச் சொல்கின்றேன். அதிலே பந்தநல்லூர் பகுதி வருமேயானால், அங்கே உடனடியாக புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 12-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இறுதி செய்யப்பட்டுள்ள இடங்களில் பந்தநல்லூர் பகுதி வரவில்லையென்றாலும், அந்தப் பகுதியில் புதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போன்று, அங்கே மின் தேவை அதிகரித்திருக்கின்ற சூழ்நிலை இருக்குமானால், அதையும் கருத்திற்கொண்டு, புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான ஆய்வுகளை அரசு மேற்கொண்டு, அந்த ஆய்வுகளின் அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2014 ஜனவரி 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடனில் மூழ்கியிருந்த மின் துறையை தன்னுடைய நுண்ணறிவால், தொலைநோக்குப் பார்வையால் மீட்டெடுத்து, மின் தேவையில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ள மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, வேலூர் மாவட்டம், எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட இச்சுப்புத்தூர் கிராமத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஒரு தனியார் நிறுவனத்தின் மூலமாக 1½ ஏக்கர் நிலம் மின் துறைக்கு தானமாக தரப்பட்டுள்ளது. அந்த நிலத்திலே 110/33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்கு மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அந்தத் துணை மின் நிலையத்தை அமைத்தால், அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள சுமார் 12-க்கும் மேற்பட்ட கிராமத்திலுள்ள விவசாய மக்களும், நெசவாளர்களும் பயனடைவார்கள். ஏழையெளியோர் ஏற்றம் பெற எல்லா திட்டங்களையும் வாரி வழங்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இச்சிப்புத்தூர் கிராமத்திற்கு ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அந்தப் பகுதியில் நிலம் வழங்கப்பட்டு, கையகப்படுத்தும் பணி முடிவடைந்திருக்கும் என்று சொன்னால், உறுதியாக, விரைவாக அந்தப் பகுதியிலே புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

[2014 ஜனவரி 31

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கரம்பை கிராமம் மற்றும் கீழக்குறிச்சி ஆகிய இடங்களிலே புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று இதே சட்டமன்றத்திலே நான் இரண்டு முறை கோரிக்கை விடுத்திருக்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு positive-ஆக பதிலளித்தார்கள். ஆனால், இன்னும் அதற்கான பணிகள் தொடங்கப்படாமல் இருக்கின்றன. அதற்கான இடமும் தயாராக இருக்கிறது என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை விரைவில் முடித்துத் தருவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதியிலே புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு விரைவுபடுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்கால இந்தியாவை வளமான இந்தியாவாக மாற்றிக் காட்டும் ஆற்றல்மிக்க தலைவி, எங்கள் தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, அத்தாணிப் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்கத், இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தினைத் தேர்வு செய்தும், இன்னும் இதுவரை பணிகள் தொடங்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பணியினை விரைவாக தொடங்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2014 ஜனவரி 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடம் மின்சார வாரியத்திற்கு மாற்றிக் கொடுக்கப்பட்டுவிட்டதா என்பதை அவர் தெளிவாகக் குறிப்பிடவில்லை. இருந்தாலும், நாங்கள் ஆய்வு செய்து அதைப் பரிசீலிக்கிறோம். அங்கே நிலம் கையகப்படுத்தப்பட்டுவிட்டது என்று சொன்னால், புதிய துணை மின் நிலையம் அமைக்கின்ற பணியை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைந்து மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

2—

புதிய கட்டடம்

***28116—திரு. கடம்பூர் ராஜு:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, கோவில்பட்டி நகராட்சி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

கோவில்பட்டி நகராட்சி அலுவலகக் கட்டடம் 1934 ஆம் ஆண்டு கட்டப்பட்டு சுமார் 74 ஆண்டுகள் பழமையான கட்டடம் ஆகும். எனவே, புதிய அலுவலகக் கட்டடம் கட்ட ரூ.5 கோடி மதிப்பீட்டில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தேவைப்படும்